2009 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரங்கள் எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அதை முக்கியம் என்று கருதிதான், மாண்புமிகு மறைந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்த நேரத்தில் காடுகள் ஒரு வரம்பின்றி அழிக்கப்படுவதைத் தடுப்பதற்காக மிகக் கடுமையான திட்டம், வனப் பாதுகாப்புச் சட்டத்தை 1980—லே கொண்டுவந்தார்கள். அந்த நேரத்திலே ஒவ்வொரு அரசும் எது எது வனம் என்று வருவாய்த் துறையின்மூலமாகக் குறிப்பிடப்பட்டது. அப்படி வருவாய்த் துறையே வனப் பகுதி என்று—அதை அவர்கள் தரிசு நிலம் என்றோ அல்லது வேறு நத்தம் என்றோ குறிப்பிட்டு இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் வனப் பகுதி என்று—குறிப்பிட்டுக் கொடுத்தவுடன் வனம் என்று அது classify ஆன பிறகு, இப்பொழுது திரும்பப் பெறவேண்டுமேயானால்—அதற்கென்று விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள்; நான் பல முறை சொல்லி இருக்கிறேன்; எனவே—அந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்தால்தான் அந்த வன நிலத்தைத் திரும்ப எடுக்க முடியும். ஒரு காலத்திலே அது வருவாய்த் துறை நிலமாக இருந்தது. அதை இப்பொழுது கொடுத்துவிடுங்கள் என்று கேட்டால் நாங்கள் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. த.அ. மேகநாதன் மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணை

***32778—திரு. த.அ. மேகநாதன்:**
திரு. ஜி.கே. மணி:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பாடூர் ஏரியில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரிப்பட்டினம், பாடூர் ஊராட்சியில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைத்துத் தருவது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாடூர் ஏரி, திம்மாபுரம் ஏரி, பன்னந்தூர் ஏரி, பாடமங்கலம் ஏரி, தளிப்பட்டி ஏரி, வெள்ளிச்சந்தை ஏரி மற்றும் 10–க்கும் மேற்பட்ட ஏரிகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30–க்கும் மேற்பட்ட ஏரிகளிலும் மீன்குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் உப தொழிலாக இதனைச் செய்து வருகிறார்கள். மேற்படி ஏரிகளில் மீன்குஞ்சுகளை வளர்க்க, மீன்குஞ்சுகளை வெளி மாநிலங்களான கேரளா, ஆந்திரா மற்றும் வெளி மாவட்டங்களான தஞ்சாவூர், கன்னியாகுமரி போன்ற தொலைவாக உள்ள இடங்களிலேயிருந்து மீனவர்கள் அதிக விலைக்குப் பெற்று வளர்த்து வருகின்றனர். மேற்படி ஏரிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 50 இலட்சம் மீன்குஞ்சுகள் தேவைப்படுகின்றன. விவசாயிகளும் தங்களுடைய கழனிகள் மற்றும் குட்டைகளில் வளர்க்கத் தேவையான மீன்குஞ்சுகளையும் வெளி மாநிலங்களுக்குச் சென்றுதான் வாங்கி வருகின்றார்கள். எனவே, மீனவர்களும், விவசாயிகளும், மீன்குஞ்சுகளை வளர்க்க மிகவும் சிரமம் அடைந்து வருவதால், எனது தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திலே பெரிய ஏரியான பாடூர் ஏரியில் மீன்குஞ்சு வளர்க்க, போதுமான அனைத்து வசதிகளும் இருந்து வருவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கருத்தில்கொண்டு அரசு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற

2009 பிப்ரவரி 23]

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணையில் அரசு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. ஆகவே, அதே மாவட்டத்தில் இருக்கின்ற காவேரிப்பட்டினம் தொகுதி, பாடூர் ஊராட்சியில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.*

திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.ஆர்.பி. அணையில் அதற்கான வசதிகள் ஏதும் செய்யப்படவில்லை. பெயரளவில்தான் அங்கு மீன்குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன என்று சொல்லி வருகின்றார்கள். தமிழகத்தில், படித்து வேலையில்லா இளைஞர்கள் அதிகம் பேர் உள்ளனர். அவர்கள் உப தொழிலாக மீன்குஞ்சு வளர்க்கும் தொழிலைச் செய்தால் நல்ல வருவாய் கிடைக்கும். எனவே, மாவட்டந்தோறும், அரசு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா; அதற்காக அரசு குறைந்த வட்டியில் கடன் தருமா; இதுபோன்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையின்மூலமாக பவானிசாகர், மணிமுத்தாறு, மேட்டூர் போன்ற இடங்களில் மீன்குஞ்சு பொரிப்பகங்களும், அதேபோல நம்முடைய திருவள்ளூர் மாவட்டம், பூண்டி, கடலூர் மாவட்டம், லால்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கரந்தை போன்ற இடங்களில் மீன் வளர்ப்பு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பாளர்கள் ஆர்வமாக இருப்பதாகவும், பிற மாவட்டங்களுக்கு, மாநிலங்களுக்கு அங்கிருந்து மீன் விற்பனை செய்யப்படுவதாகவும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. திரைப்பட இசையமைப்பாளர் திரு. ஏ.ஆர். ரஹ்மான், ஆஸ்கர் விருதுகள் பெற்றமைக்குப் பேரவைத் தலைவரின் பாராட்டுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் செய்தி. இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக ஓர் இந்தியர், அதுவும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* திரைப்படத் துறையில் உலகத்திலேயே மிக உயரிய விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுகள் இரண்டினை, தான் இசை அமைத்த 'Slumdog Millionaire' என்ற படத்திற்காகப் பெற்றுள்ளார். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* ஒரு தமிழன், தமிழ் திரையுலகினையே உலக அரங்கில் தலை நிமிர வைத்து, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் உலகப் புகழ் பெற்ற இரு ஆஸ்கர் விருதுகளைப் பெற்றுத் தந்தமைக்குத் தமிழ்த் திரை உலகத்தினர் நலனுக்காக, வாழ்நாள் முழுவதும் அவர்கள் உயர்வையே தன் எண்ணமாகக் கொண்டு வாழ்ந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், பேரவையின் உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் அவருக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு, *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* அவர் மென்மேலும் பல்வேறு விருதுகளைப் பெற்று வரவேண்டுமென்று பேரவையின் சார்பில் வாழ்த்துகின்றேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்

(அ) பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதியில் ஆந்திர அரசு தடுப்பணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir. . .